(அக்கிநிஷ்டோமம் முதலிய
பாடல்கள்)
(பக்கங்கள் 1-53)

2

226
49

53 பக்கம்

வேள்வி. கவி.

ஓம்.
[illegible]ப்யோ தேவேப்யோ நம:

ஸ்ரீ

சதுரங்க — [illegible]

(Copied)

பகுதி II

அக்நி ஸ்தோத்ரம்.

ரிஷிகள்:- எங்கள் வேள்விக் கூடமீதில் ஏறுதே தீ! தீ! — இந்நேரம்
பங்க முற்றே பேய்களோடப் பாயுதே தீ! தீ! — இந்நேரம்.

அசுரர்:- தோழரே நம் ஆவி வேகச் சூழுதே தீ! தீ! — ~~[illegible]~~ ஐயோ! நாம்
வாழவந்த காடுவேக வந்ததே தீ! தீ! — அம்மாவோ!

ரிஷி:- பொன்னை யொத்தோர் வண்ணமுற்றான் போந்துவிட்டானே — இந்நேரம்
சின்னமாகிப் பொய்யரக்கர் சிந்தி வீழ்வாரே — இந்நேரம்.

அசுர:- இந்நாள் தேவர் தம்மை ஏசிவாழ்ந்தோமே — ஐயோ! நாம்
வெந்து போக மானிடர்க்கோர் வேதமுண்டாமோ! — அம்மாவோ!

ரிஷி:- வானை நோக்கிக் கைகள் தூக்கி வளருதே தீ! தீ! — இந்நேரம்
ஞானமேனி, உதயகன்னி நண்ணிவிட்டாளே — இந்நேரம்.

அசுர:- கோடி நாளாய் இவ்வனத்தில் கூடிவாழ்ந்தோமே — ஐயோ! நாம்
பாடி வேள்வி மாற்றார் செய்யப் பண்பிழந்தோமே — அம்மாவோ!

ரிஷி:- கட்டுதல் மேவும் கதிர் போன்றன் சுடர்கள் தீ! தீ! — இந்நேரம்
ஓட்டி யோட்டிப் பகைமையெல்லாம் வாட்டுகின்றானே — இந்நேரம்

அசுர:- வலியிலாதார் மாற்றரென்று மகிழ்ந்து வாழ்ந்தோமே — ஐயோ! நாம்
கலியை வென்றோர் வேதவுண்மை கண்டு கொண்டாரே — அம்மாவோ!

ரதி:— வலிமை மைந்தன் வேல்விழி என்றென்று வாய்திறக்கிறானோ — இந்நேரம்
மலரு செய்யும் தேனு மொழி மகிழ்வதற்கானோ — இந்நேரம் —

அவை:— உயிரை விட்டும் உணர்வை விட்டும் தேடிவந்தோமே — ஐயோ, நாம்
துயிலுடையன் மீதிருந்தி தோன்றி விட்டானே — அம்மாவோ!

ரதி:— அமரர் தூதன் அழகு நாதன் ஆர்த்தெழுகிறானோ — இந்நேரம்
இமய மைந்தன் எழு வாழ்வில் இயல் கொண்டானோ — இந்நேரம்.

அவை:— வருணன் மித்ரன் அரியவனும் வதனை புனைபாரோ! — ஐயோ, நாம்!
பெருமை தீயின் புகையும் பெய்யும் மின்னல் மாய்வேனோ! — அம்மாவோ!

ரதி:— அமரரெல்லாம் வந்து நம்முன் அலர்கள் கொண்டாரோ — இந்நேரம்
மதனும் இல்லை மனதும் இல்லை நாணம் காண்போமே — இந்நேரம்

அவை:— பகையும் இல்லை யாப்பு மெய்தி பாடுகின்றனோ — ஐயோ, நாம்.
புகையில் விழு இந்திரன் தீர் பொறிகள் காண்பீரோ! — அம்மாவோ!

ரதி:— இளையும் வந்தாள் கவலை வந்தாள் இரவு வந்தானோ — இந்நேரம்
பிளவு பெருகல் தீயனிலே இன்னமுயர்ந்தேனே! — இந்நேரம்.

ரதி:— அன்னமென்பீர், பாதமெய்யும் அமுது மொழிவீரோ — இந்நேரம்
மின்னல் நினைப்பீர் தேவரெல்லாம் வேல்விழிவீரோ — இந்நேரம்

ரதி:— சோம மொழியே தேவர்க்கெல்லாம் ஜோதி வெந்தேனே — இந்நேரம்
தீமை தீர்ந்தே வாழி யாப்பும் ஆர்ந்து விட்டேனே — இந்நேரம்.

பி:- உலகுயர்ந்தே நுண்ணறிவுடன் நீ [illegible] — [illegible]
பெருமை செம்மை வாழ்ந்திட [illegible] — [illegible].

பி:— எங்கும் வேலை யமரதெங்கும் பாரதமணும் நீ! நீ! — [illegible]
தங்கும் இன்பம் அமர வாழ்க்கை சார்ந்து நின்றோமே — [illegible]

பி:— வாழ்க தேசம், வாழ்க வேலை, மாந்தர் வாழ்வாரே — [illegible]
வாழ்க வையம், வாழ்க வானம், வாழ்க நீ! நீ! நீ! — [illegible]

(2)

லக்ஷ்மி ~~[illegible]~~ பிரார்த்தனை

திரு வேட்கை

நாட்டை ராகம் — சதுஸ்ர ஏக தாளம்.

மலரின் மேவு திருவே - உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்.
நிலவு செய்யு முகமும் - காண்பார்
நினைவழிக்கும் விழியும்.
கலகலென்ற மொழியும் - ~~[illegible]~~ தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும் - கண்டுன்
இன்பம் வேண்டி நின்றேன். (1)

கமல மேவு திருவே - நின்மேல்
காதலாகி நின்றேன்
குமரி நின்னை யிங்கே - பெற்றோர்
கோடி யின்ப முற்றார்.
அமரர் போல வாழ்வேன் - என்மேல்
அன்பு கொள்வை யாயின்,
இமய வெற்பின் மோத - நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன். (2)

வாணி தன்னை யென்றும் - நினது
வரிசை பாட வைப்பேன்.
நாண மேகலாமோ? - என்னை
நன்க றிந்தி லாயோ?

பேணி வையமெல்லாம் - நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணு மங்கையர் தாம் - கண்ணன்
பொறிக் காவலரன்றோ? (3)

பொன்னு நல்ல மணியும் - சுடர்ந்த
பூண்ட போற்றி வந்தாய்.
மின்னு நின்றன் வடிவு - பணிகள்
மேனி நிறுத்தி அழகை
என்னுரைப்பேனடீ? - கிளியே,
என்னுயிர்க் கொழுந்தே,
நின்னை மார்பு சேர்த்து - அதுவே
நிகரில்லாது வாழ்வேன். (4)

செல்வ மெட்டு மெய்தி - நின்னால்
செம்மை யேறி வாழ்வேன்.
இல்லை யென்ற கொடுமை - உலகில்
இல்லையாக வைப்பேன்.
முல்லை போன்ற முறுவல் - பட்ட
மோக வாதை நீக்கி,
பல்ல[illegible] தே - நிதம்
புய[illegible] (5)

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] II ([illegible])

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஓம்

ஸ்ரீ தேவி ஸ்துதி. திருமகள் (4) 7 I-55 பகுதி 8 II

ராகம். சங்கராபரணம்

நித்தமுனை வேண்டிமனம் நினைப்பதெல்லாம் நீயாய்ப்
பித்தனைப் போல் வாழ்வதிலே பெருமையுண்டோ திருவே?
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றிகொண்டே
உத்தமநிலை சேர்வரென்றே
உயர்ந்தவேதம் உரைப்பதெல்லாம்
அத்தனையும் ~~பொய்~~ பொய்யோடீ? சடமனமே, திருவே
மெத்தமையல் கொண்டுவிட்டேன், மேவுவாய் திருவே. (1)

உன்னையன்றி யின்பமுண்டோ உலகமிசை வேறே?
பொன்னைவடி வென்றுடையாய் புத்தமுதே, திருவே.
மின்னொளிதரு நன்மணிகள்
மேடையுயர்ந்த மாளிகைகள்
வன்னமுடைய தாமரைப்பூ
தண்ணிழற்சோலை தேன்கனிகளும்
அன்னதெல்லாம் அருளுவாய் அதிசயமாய் தருவாய்
நின்னருளை வாழ்த்தி நின்று நிலைபெறுவேன் திருவே. (2)

ஆடுகளும் மாடுகளும் அழகுடைய பரியும்
வீடுகளும் நெடுநிலமும் விரைவினிலே தருவாய்,
நீ தனக்கிணையாய் தெய்வமுண்டோ?
ஏனிந்த மயக்கச் சஞ்சலமுண்டோ?
வாடி நிதந் தவிப்போர்
வாழ்வினைப் போல் துன்பமுண்டோ?
தேடுமனம் செல்வமெல்லாம் தந்தருள்வாய் திருவே
பீடுடைய வானொளியே பெருந்திருவே திருவே (3)

ஓம் (5) 8

~~பராசக்தி~~

~~ஒரு புலவன் வேண்டுகோள்~~

காணி நிலம். ஆதிதாளம்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்கு
தூணி லழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் - ~~அங்கு~~ அங்கு
கேணி யருகினிலே - தென்னைமரம்
- கீற்று மிளநீரும் - (1)

பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - ~~நல்ல~~ நல்ல
முத்துச் சுடர்போலே - நிலாவொளி
முன்பு வரவேணும். - அங்கு
கத்துங் குயிலோசை - சற்றேவந்து
காதிற் படவேணும் - என்றன்
சித்த மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும் - (2)

பாட்டுக் கலந்திடவே - அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும், - ~~எங்கள்~~ எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டு தரவேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா, நின்றன்
காவலுற வேணும் - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேணும். (3)

புதுமைப் பெண்.

போற்றி! போற்றி ஓராயிரம் போற்றி! நின்
பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி காண்.
சேற்றிலே புதிதாக முளைத்த தோர்
செய்ய தாமரைத் தேமலர் போலொளி
தோற்றி நின்றனை, பாரத நாட்டிலே
துன்பம் நீக்கும் சுதந்திரப் பேரிகை
சாற்றி வந்தனை. மாதரசே எங்கள்
சாதி செய்த தவப்பயன் வாழி நீ! (1)

மாதர்க் குண்டு சுதந்திரம் என்று நின்
வண்மலர்த் திருவாயின் மொழிந்த சொல்,
நாதந் தானது நாரதர் வீணையோ?
நம்பிரான் கண்ணன் வேய்ங்குழ லின்பமோ?
வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ?
சாதல் மூத்தல் கெடுக்கும் அமிழ்தமோ?
தையல் வாழ்க பல் லாண்டு பல்லாண்டிங்கே. (2)

அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் நெறிகள் யாவினும் மேம்பட்டு மானுடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே
சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள்
தீயி லிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கை கூறும் ~~[illegible]~~ நவீனங்கள் கேட்டிரோ! (3)

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்.
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்.
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்.
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ! (4)

நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்.
நீசத் தொண்டு மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவே அரிதாவதோர் செய்தியாம்.
குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்.
கொடுமை செய்தும் அறிவை அழித்துமந்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்
நங்கை கூறும் வியப்புக்கள் கேட்டீரோ! (5)

புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
பொய்ம்மை யாண்ட கலிக்குப் புதிதன்றாம்
சதுமறைப்படி மாந்தர் இருந்தநாள்
தன்னிலே பொதுவான வழக்கமாம்
மதுரத் தேமொழி மங்கையர் உண்மைதேர்
மாதவப் பெரியோருடன் ஒப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய
முறைமை மாற்றக் கேடு விளைத்திடும் (6)

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ! (7)

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவி லொழிப்பராம். (8)

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்
சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவு மழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ! (9)

போற்றி, போற்றி, ஜயஜய போற்றியிப்
புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே
மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை யமரர்க ளாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னைநல்
அருளி னாலொரு கன்னிகை யாகியே
தேற்றி யுண்மைகள் கூறி வந்திட்டாள்
செல்வம் யாவினு மேற்செல்வ மெய்தவே (16)

கண்ணம்மா — என் காதலி.

[illegible] — [illegible]

பாயு மொளி நீ யெனக்கு
பார்க்கும் விழி நானுனக்கு
தோயு மது நீ யெனக்கு
தும்பியடி நானுனக்கு
வாயுரைக்க வருகுதில்லை
வாழி நின்றன் மேன்மையெல்லாம்
தூய சுடர் வானொளியே
சூறையமுதே கண்ணம்மா. 1.

வீணையடி நீ யெனக்கு — மேவும் விரல் நானுனக்கு
பூணும் வடம் நீ யெனக்கு — புது வயிரம் நானுனக்கு
காணுமிடந் தோறுநின்றன் கண்ணினொளி வீசுதடீ
மாணுடைய பேரரசே வாழ்வு நிலையே கண்ணம்மா. (2)

வானமழை நீ யெனக்கு — வண்ணமயில் நானுனக்கு
பானமடி நீ யெனக்கு — பாண்டமடி நானுனக்கு
ஞான வொளி வீசுதடீ — நங்கை நின்றன் சோதிமுகம்
ஊனமறு நல்லழகே — ஊறு சுவையே கண்ணம்மா. (3)

வெண்ணிலவு நீ யெனக்கு — மேவுகடல் நானுனக்கு
பண்ணு சுதி நீ யெனக்கு — பாட்டினிமை நானுனக்கு. ~~பாட்டினிமை நானுனக்கு~~
எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர் எண்ணமில்லை நின்சுவைக்கே
கண்ணின் மணி போன்றவளே கட்டியமுதே கண்ணம்மா. (4)

வீசுகமழ் நீயெனக்கு - விரியுமலர் நானுனக்கு
பேசுபொருள் நீயெனக்கு - பேணுமொழி நானுனக்கு
நேசமுள்ள வான்சுடரே - நின்னழகை யேதுரைப்பேன் ?
ஆசை மதுவே கனியே, அள்ளு சுவையே கண்ணம்மா. (5)

காதலடி நீயெனக்கு - காந்தமடி ~~நீ~~ நானுனக்கு
வேதமடி நீயெனக்கு - வித்தையடி நானுனக்கு.
போதமுற்ற போதினிலே பொங்கிவரும் தீஞ்சுவையே
நாதவடி வானவளே நல்லவுயிரே கண்ணம்மா. (6)

நல்லவுயிர் நீயெனக்கு - நாடியடி நானுனக்கு
செல்வமடி நீயெனக்கு - சேமநிதி நானுனக்கு
எல்லையற்ற பேரழகே எங்கு நிறை ~~[illegible]~~ பொற்சுடரே
முல்லைநிகர் புன்னகையாய் மோதுமின்பமே கண்ணம்மா. (7)

தாரையடி நீயெனக்கு - தண்மதியம் நானுனக்கு
வீரமடி நீயெனக்கு - ~~[illegible]~~ வெற்றியடி நானுனக்கு
தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கு மின்பமெல்லாம்
ஓருருவ மாய்ச்சமைந்தாய் உள்ளமுதே கண்ணம்மா. ௮

(copied) ~~(8)~~ 15

I-137 16

பகுதி III

பகைவனுக் கருள்வாய்

பகைவ னுக்கருள்வாய் - நன்னெஞ்சே
பகைவ னுக் கருள்வாய்!

புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே - நன்னெஞ்சே
(பூமியிற் கண்டோமே)
பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே
(பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே) — (பகைவனு) — 1

எவ்வுயிர் தன்னிலு மீசனுள் ளானென
எப்பொழுதும் நினைப்பாய் - நன்னெஞ்சே
தெவ்வுயிர் தன்னிலுஞ் சிவனிருப்பதைச்
சிந்தனை செய்யாயோ? - நன்னெஞ்சே (பகைவனு) (2)

சிப்பியி லே நல்ல முத்து விளை~~ ~~ந்திடும்
செய்தி யறியாயோ? - நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சும் குருக்கத்திக்
கொடி வளராதோ? - நன்னெஞ்சே (பகைவனு) 3

உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ள நிறைவாமோ? - நன்னெஞ்சே
தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனாமோ? - நன்னெஞ்சே (பகைவனு). 4.

வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ? - நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவானென்ற
சாத்திரம் கேளாயோ? - நன்னெஞ்சே (பகைவனு) 5

போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்
போல வந் தானுமவன் - நன்னெஞ்சே
நேருக் கருச்சுனன் தேரிற் கசைகொண்டு
நின்றதுங் கண்ணனன்றோ? - நன்னெஞ்சே (பகைவனு) 6.

தின்ன வரும்புலி தன்னையு மன்பொடு
~~சிந்தையிற்~~ ~~[illegible]~~ - நன்னெஞ்சே
சிந்தையிற் போற்றிடுவாய்)
அன்னை பராசக்தி அவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய் - நன்னெஞ்சே (பகைவனு) - 7.

லக்ஷ்மி — தேவி.
சரண் புகுதல்.

மாதவன் சக்தியினைச் — செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெலாம் — எந்தப்
போதுந் திருமகள் புகழ்தனிலே
வேதனைப் படுவமோ — உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்க வில்லை — அன்னை
மாமகளடியினைச் சரண்புகுவோம். (1)

நிதிகள் அனைத்தையும் — தொழில்
செட்டை நினைக்கவும் நெஞ்சினிலே.
மேவிய வாணிகம் போல் — ஐயம்
முயற்சியெல்லாம் கெட்டு முடிவதுவும்
ஊக்கம் — பொருளுயர்வோர் — ஏன்
எய்திடு வழியினை அடுப்பதுவும்
வீழ்கவே கெடு நோய் தான் — வரும்
மிதிலா வறுமையோ கொடுமையன்றோ? (2)

பாற்கடலிடைப் பிறந்தாள் — அது
பயந்த நல் அமுதத்தின் பான்மை கொண்டாள்
ஏற்குமோர் தாமரைப்பூ — அதில்
இணைமலர்த் திருவடி இசைந்திருப்பாள்
நாற்கரந் தானுடையாள் — அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்
வேற்கரு விழியுடையாள் — செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள். (3)

நாரணன் பாம்பினே - அண்டு
நாடுடை கிழ்ந்து மன்னர் நிடுப்பால்
தோரணப் பந்தலும் - பசும்
தொடுவழுந் தடங்களும் மாடத்திலும்
வீரர்கள் தோரணிலும் - உடல்
வெயர்த்திட வுழைப்பவர் வொழுங்கிலும்
பாரதி சிறந்திலும் - வெளி
பாலட விழுந்தோர் குடுமிபுரிவான். 4

பொன்னிறு மணிகளிலும் - நிறும்
புலியுந் சாதிகளும் வனங்களிலும்
கன்னலும் நிறைப்பனிலும் - செழுங்
மட்டுடும் பொழிலும் கழனியிலும்
மன்னிய துணிகளிலும் - மன்னர்
மெய்த்திறம் வாழ்த்திடில் நிலைக்கும்
பண்ணினர் புகழ்பாட - அவள்
பதுமை வாழ்த்திடும் பதம் பெறுவோம். 5

மண்ணிலுங் கண்களிலும் - பசு
வாய்ப்பிலும் வாட வாழ்த்திலும்
புண்ணிய வேள்வியிலும் - உயர்
புகழிலு மகிமையிலும் புத்திமையிலும்
மண்ணுறுந் மானமையிலும் - நல்ல
மாட்சியுள் கீர்த்தியும் பழந்தினுமே
நன்னிய செல்வமோ - என்றன
நாவலு மொழிந்திடு நாவுடுதோறும் — 6.

வெற்றிவேல் படையினிலும் - பல
விசயஞ் சொரிந்திடுகின்ற கொடையினிலும்
நற்றவ நடையினிலும் - நல்ல
நாவலர் [illegible] [illegible]டையினிலும்
உற்ற பலர் சிறந்துரைய — மிக்கும்
உலகமெங்கும் பெற்றியாய் வென்றி சிறந்தோங்கும்
கொற்றவன் கொடிகொண்டவன் - அவன்
கொடிமாரன் வெள்ளி [illegible] [illegible] போலே — (ஏ)

பெண்மை

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!
தண்மை, இன்பம், நற்புண்ணியம் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும். (1)

அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பம் தீர்வது பெண்மையி னாலடா,
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம். (2)

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலி யழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம். (3)

பெண்ண றத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா. (4)

சக்தி யென்ற மதுவையுண் போமடா
தாளங் கொட்டித் திசைகள் அதிரவே
ஓத்தி யல்வதோர் பாட்டுங் குழல்களும்
ஊர் வியக்கக் களித்துநின் றாடுவோம். (5)

உயிரைச் சேர்த்திடும் உயிரினைக் காத்திடும்
உயிரினுக் ~~[illegible]~~ யிரா இன்ப மாகிடும்
உயிரி னும்இந்தப் பெண்மை இனிதடா
ஊது கொம்புகள்! ஆடு களிகொண்டே! (6)

போற்றி தாயென்று தோள்கொட்டி யாடுவீர்.
புகழ்ச்சி கூறுவீர் காதற் கிளிகட்கே.
நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே (7)

போற்றி தாயென்று தாளங்கள் கொட்டடா;
போற்றி தாயென்று பொற்குழ லூதடா,
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே (8)

அன்ன மூட்டிய தெய்வ மணிக் கையின்
ஆணை காட்டி லனலை விழுங்குவோம்
கன்னத் தேமுத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப் பாடுவோம் (9)

பெண்மை வாழ்கென்று
கூத்திடுவோமடா

கேட்பன.

நல்லதோர் வீணை செய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி — எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ, — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி — நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ? — (1)

விசையுறு பந்தினைப் போல் — உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல் கேட்டேன்
நசையறு மனம் கேட்டேன் — நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர் கேட்டேன்
தசையினைத் தீச்சுடினும் — சிவ
சக்தியைப் பாடும்நல் அகம் கேட்டேன்
அசைவறு மதி கேட்டேன் — இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ? (2)

கண்ணன் - என் காதலன்.

ஆசை முகமறந்து போச்சே - இதை
ஆரிடம் சொல்வேனடி தோழி?
நேச மறக்கவில்லை நெஞ்சம் - எனில்
நினைவு முகமறக்க லாமோ? (1)

கண்ணில் தெரியுதொரு தோற்றம் - அதில்
கண்ண னழகு முழு தில்லை
நண்ணு முகவடிவு காணில் - அந்த
நல்ல மலர்ச்சிரிப்பைக் காணோம். (2)

ஓய்வு மொழிதலுமில் லாமல் - அவன்
உறவை நினைத்திருக்கும் உள்ளம்
வாயு முரைப்பதுண்டு கண்டாய் - அந்த
மாயன் புகழினை எப்போதும். (3)

கண்கள் புரிந்துவிட்ட பாவம்! - உயிர்க்
கண்ண னுருமறக்க லாச்சு -
பெண்க ளினத்தி லிதுபோலே - ஒரு
பேதையை முன்பு கண்ட துண்டோ? (4)

தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த
வைய முழுதுமில்லை தோழி. (5)

~~[illegible]~~ கண்ணன் முகமறந்து போனால் - இந்தக்
கண்க ளிருந்து பயனுண்டோ? -
வண்ணப் படமுமில்லை [illegible] ~~கண்டாய்~~ - இனி
வாழும் வழியென்னடி தோழி? - (6)

Not B's handwriting
12.5.49

74

25

I-143

சிட்டுக்குருவி

விட்டு விடுதலை யாகி நிற்பாயிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே.

எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவொடு நீந்துவை
மட்டுப் படாதெங்குங் கொட்டிக் கிடக்குமிவ்
வானொளி யென்னுமது வின்சுவை யுண்டு (விட்டு)

பெட்டையி னோடின்பம் பேசிக் களிப்புற்றுப்
பீடையிலாதோர் கூடுகட்டிக் கொண்டு
முட்டைதருங் குஞ்சைக் காத்துமகிழ் வெய்தி
முந்த வுணவு கொடுத்தன்பு செய்திங்கு (விட்டு)

முற்றத்தி லேயுங் கழனி வெளியிலு
முன்கண்ட தானியந் தன்னைக் கொணர்ந்துண்டு
மற்றப் பொழுது கதைசொல்லித் தூங்கிப்பின்
வைகறை யாகுமுன் பாடி விழிப்புற்று (விட்டு)

சக்திக் கூத்து.

ராகம் -

பல்லவி

தகத் தகத்தகத் தகதகவென் றாடோமோ? - சிவ
சக்தி சக்தி சக்தி யென்று பாடோமோ - (தகத்தக)

சரணங்கள்

அகத் தகத் தகத் தகத்தினிலே உள்நின்றாள் - அவள்
அம்மையம்மை யெம்மை நாடு பொய்ம் மென்றாள்,
~~தகத்தக~~ [illegible]
சூலம் என்று வாழ்த்திடுவோம் நாமென்றே — (தகத்தகத்தக) 1

புகப்புகப் புக வின்பமடா போதெல்லாம்
புறத்தினிலே தள்ளிடுவாய் சோர்வெல்லாம்
~~[illegible]~~ மோனத் தொளிரும் [illegible] நீ போலே - அது
தெறிக்கும் [illegible] பேய் போலே (2)

மிகத் [illegible] [illegible] வெல்வோமோ - உடல்
வீழும் வரை சோர்வு வென்று [illegible]
சகத்தினிலுள்ள மனிதரெல்லாம் நன்று நன்றென - நாம்
சதிருடனே தாளமிட்டு [illegible] நின்றென - (3)
இகத்திலே [illegible] [illegible]
இதயத்தில் [illegible] கொண்டுவிடுவோம்
[illegible] போல் [illegible] [illegible] - சக்தி
~~[illegible]~~ மகத்துவத்தை [illegible] கொண்டுவிட்டு — (4)

T-104

விடுதலை.

பல்லவி

வேண்டு மடி யெப் போதும் விடுதலை — அம்மா

சரணங்கள்

(1) தூண்டு மின்ப வாடை வீசு
துய்ய தேன்கடல்
சூழ நின்ற தீவி லங்கு
சோதி. வானவர்
ஈண்டு நமது தோழராகி
எம்மொ டமுத முண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்தி டுமின்ப மனைத்தும் உதவ — (வேண்டு)

(2) விருத்தி ராதி தானவர்க்கு
மெலிவ தின்றியே
விண்ணு மண்ணும் நம்ம தாகி
மேன்மை துன்றியே
பொருத்த முறுநல் வேத மோர்ந்து
பொய்ம்மை தீர மெய்ம்மை நேர
வருத்த மழிய வறுமை யொழிய
வையம் முழுதும் வண்மை பொழிய (வேண்டு)

(3) பண்ணி லினிய பாட லோடு
பாயு மொளியெலாம்
பாரி லெம்மை உரிமை யோடு
பற்றி நிற்கவே.
நண்ணி யமரர் வெற்றி கூற
நமது பெண்கள் அமரர் கொள்ள
வண்ண மினிய தேவ மகளிர்
மருவ நாமும் உவகை துய்க்க
(வேண்டு)

சொல்.

(சொல் வேண்டும். தேவசக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல்லொன்று வேண்டும்.)

"தேவர் வருக" வென்று சொல்லுவதோ? – ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினால்,
ஆவலறிந்து வருவீர் கொலோ? – உம்மை
யன்றி யொரு புகலு மில்லையே. (1)

ஓமென் றுரைத்து விட்டால் போதுமோ? – அதில்
உண்மைப் பொருளறிய லாகுமோ?
தீமை யனைத்து மிறந் தேகுமோ? – என்றன்
சித்தந் தெளிவுநிலை கூடுமோ? (2)

"உண்மை யொளிர்க" வென்று பாடவோ? – அதில்
உங்கள் அருள் பொருந்தக் கூடுமோ?
வண்மை யுடைய தொரு சொல்லினால் – உங்கள்
வாழ்வு பெறவிரும்பி நிற்கிறோம். (3)

"தீயை யகத்தினிடை மூட்டுவோம்" என்று
செப்பு மொழி வலிய தாகுமோ?
ஈயைக் கருடநிலை யேற்றுவீர் – எம்மை
என்றுந் துயரமின்றி வாழ்த்துவீர். (4)

வான மழைபொழிதல் போலவே – நித்தம்
வந்து பொழியுமின்பங் கூட்டுவீர் –
கானை யழித்து மனை கட்டுவீர் – துன்பக்
கட்டைச் சிதறிவிட வெட்டுவீர்.

விரிய மாநிலத்தில் நாட்டுவீர் - அங்கு
விழுத் திறமைகளை யோட்டுவீர்
தெரிய மொழிவதனை நாட்டுவீர் - நல்ல
தீப் பெருந் துயரினைப் பூட்டுவீர். (6)

மின்ன லனைய திற லோங்குமே - உயர்
வெள்ளக் கருணையிற் பாயுமே.
தின்னும் பொருளமுத மாகுமே - இங்கு
செய்கை யதனில் வெற்றி ~~[illegible]~~ சேருமே — (7)

தெய்வக் கனல் விளைந்து காக்குமே - நம்மைச்
சேரு மிருளழியத் தாக்குமே.
கைவைத்தது பசும்பொ னாகுமே - பின்பு
காலன் பயமொழிந்து போகுமே. (8)

"வலிமை, வலிமை" யென்று பாடுவோம் - என்றும்
வாழுஞ் சுடர்க்குலத்தை நாடுவோம்.
கலியைப் பிளந்திடக் கையோங்கினோம் - நெஞ்சிற்
கவலை யிருளனைத்தும் நீங்கினோம். (9)

"அமிழ்தம், அமிழ்த" மென்று கூவுவோம் - நித்தம்
அனையம் பணிந்துழுவார் தாவுவோம்.
தமிழிற் பழமறையைப் பாடுவோம் - ~~[illegible]~~ என்றுந்
தலைமை, பெருமை, புகழ் கூடுவோம், (10)

"தேவர் வருக" வென்று சொல்வமே

நிலாவும், வான் மீனும், காற்றும்.

(மனத்தை வாழ்த்துதல்)

நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவு மமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்
உலாவு மனச்சிறு புள்ளினை யெங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ? (1)

தாரகை யென்ற மணித்திரள் யாவையுஞ்
சாத்திடப் போ மனமே
ஈரச் சுவையதி லூறி வருவதில்
இன்புறுவாய் மனமே
சீரவிருஞ் சுடர் மீனொடு வானத்துத்
திங்களையுஞ் சமைத்தே
ஓருருவாக விழுங்கிடு பின்னொரு
ஒப்பதொர் வெறி கொண்டோ? (2)

பண்ணியைப் போலிங்கு மண்ணினை யாற்றிப்
படைத்துப் புலனாக்கி
வெண்ணிலவை நிழல் வானத்தி லோட
விடுப்பாய் விரைந்திடுமே
கண்ணிமை போதொரு வண்டியைப் போலிங்கு
கொண்டுவந் தூக்கியே
நின்று திரியும் வியனுலகைப் போலொரு
நிலை மனம் படைத்தோம். (3)

தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
செய்து வரும் காற்றே
உன்னைக் கேட்பதொன் றேனுந் தெரியுமோ
இளம் மனத்து வரும் போம்
சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டுவந்து
சேர்த்திடு நீ காற்றே
ல் விளக்கிடு வானகஞ் சென்றுமல்
மின்னல் ~~[illegible]~~
வெட்டொலி யேன் கொணர்ந்தாய்? (4)

மண்ணுடைத்து நல் வேனல்கள் கொள்ளெனும்
வானவன் கொண்டுவருந்தான்
பண்ணின் வண்ணத்தில் வெள்ள மன்றத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்.
மின்னலை மலையோரமும் மின்னிடு
நாயன் செல்வனும்
எண்ணும்போதே "மண்ணை காவும் பக்ஷை" என்
தெரிந்திடவாள் தேவும். (5)

விசிற நுரை மலைப்பதுங் கேட்கிற
விம்மிடுஞ் சங்கொலியும்
வாதுகள் பேசிடு மாந்தர் ஒலி
மழை ஓசையும்
ஒருத்து கொண்டு வருவது காற்றிலை
யென்னால் கற்பது ஏயோ?
இதைக் கேட்க சேர்ந்து பார்த்தவடு
தெரிந்தவாய் [illegible] — (6)

பராசக்தி.

௨௨

கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்
காவியம் பல நீண்டன கட்டென்பார்
விதவிதப்படு மக்களின் சித்திரம்
மேவு நாடகச் செய்யுளை வேண்டென்பார்,
இதயமோவெனிற் காலையு மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்,
எதையும் வேண்டல ரிந்தப் பராசக்தி
இன்ப மொன்றினைப் பாடுத லன்றியே —— 1.

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென்று ஒரு தெய்வங் கூறுமே
கூட்டி மானுடச் சாதியை யொன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டிலே யறங் காட்டெனு மோர் தெய்வம்
பண்ணி லின்பமுங் கற்பனை விந்தையும்
ஊட்டி யெங்கும் உவகை பெருகிட
ஓங்கு மின்கவி யோதெனும் வேறொன்றே —— 2.

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டிலே தனி யின்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி நான்
மூட்டு மன்புக் கனலொடு வாணியை.
முன்னு கின்ற பொழுதிலெல் லாங்குரல்
காட்டி யன்னை பராசக்தி யேழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கிறாள் - 3.

மழை பொழிந்திடும் வண்ணத்தைக் கண்டு நாம்
வானிருண்டு கரும்புயல் கூடியே
இடியு மின்னல் சரேலென்று பாயவும்
சீத வாடை யொரற் செறல் செய்யவும்
உடைய வெள்ள மிடையன்றி யில் வாணரீர்
ஊற்றுத் துயர் புரைக்கு வேண்டுமேல்
மழையுங் காற்றும் பராசக்தி செய்கைதான்
வாழ்க சக்தியென்று பாடுமென் வாணரே — 4.

தொல்லுலகத் தோர் ஞான நினைவுடையாள்
சொல்லில் பேசிடுஞ் செய்ய வடிவுடையாள்
அல்லலுக் கொர் பெருந்துணை யானவள்
அன்பிலா அக்தியவள் பேணி நிற்பவள்
கல்லுக்குளே நிறை பொறை கொண்டவள்
கால வெள்ளத்தி லே நிலை கொண்டவள்
புல்லினில் வயிரப்படை கொண்டவள்
புத்தியிற் பராசக்தி தோன்றுமே — 5.

I-106

அழகுத் தெய்வம்.

மங்கியதோர் ~~[illegible]~~ நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும்; இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்!
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன், அடடாவோ, அடடா!
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்றே யறிந்தேன் — 1.

யோகந்தான் சிறந்ததுவோ தவம் பெரிதோ வென்றேன்
யோகமே தவந் தவமே யோகமென வுரைத்தாள்
ஏகமோ பொருளன்றிப் பலவுண்டோ வென்றேன்
இரண்டுமாம் ஒன்றுமாம் யாதுமா மென்றாள்
தாகமறிந் தீயுமருள் ~~[illegible]~~ வானமழைக்கு உண்டோ?
சாகாமல் துயர் ~~[illegible]~~ [illegible] தீர்த்திடுமோ வென்றேன்
?? வேதமெலாம் ~~[illegible]~~ [illegible] வெளிப்படுத்தா மறைதான்
விருப்புடனோ ~~[illegible]~~ [illegible]லதோ வேறுண்டோ வென்றாள் — 2

காலத்தின் விதி மதியைக் கடந்திடுமோ வென்றேன்
காலமே மதியினுக் கோர் கருவியா மென்றாள்
ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ வென்றேன்.
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலா மென்றாள்
ஏலத்தில் விடுவதுண்டோ எண்ணத்தை யென்றேன்
எண்ணினால் எண்ணியது நண்ணுமடா வென்றாள்
மேதைக்குச் சாவியுமோ வேண்டாமோ வென்றேன்
மெய்த்தீ யருள் [illegible] ~~[illegible]~~ [illegible] — 3.

ஆத்ம ஜயம்.

கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
கவர்ந்திட மாட்டாவோ? - அட
மண்ணில் தெரியுது வானம் அதுநம்
வசப்பட லாகாதோ?
எண்ணி யெண்ணிப் பல நாளு முயன்றிங்
கிறுதியிற் சோர்வோமோ?
விண்ணிலு மண்ணிலுங் கண்ணிலு மெண்ணிலு·
மேவு பராசக்தியே - 1.

என்ன வரங்கள் பெருமைகள் வெற்றிகள்
எத்தனை மேன்மைகளோ.
தன்னை வென் றாலவை யாவும் பெறுவது
சத்திய மாகுமென்றே
முன்னை முனிவ ருரைத்த மறைப் பொருள்
முற்று முணர்ந்த பின்னும்
தன்னை வென் றாளும் பெருமை பெறாதிங்கு
தாழ்ந்து கிடப்போமோ? - (2)

தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
யந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே
கடலின் முத்தும் எடுத்திடுவீரே,
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடுவீரே
பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே. 1.

மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே
மரத்தை வெட்டி மனைசெய்குவீரே
உண்ணக் காய்கனி தந்திடுவீரே
உழுது நன்செய்ப் பயிரிடுவீரே
எண்ணெய், பால், நெய் கொணர்ந்திடுவீரே
இழையை நூற்று நல்லாடை செய்வீரே
விண்ணினின் றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே. 2.

பாட்டும் செய்யுளும் கோத்திடுவீரே,
பரத நாட்டியக் கூத்திடுவீரே,
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடுவீரே
நாட்டிலே அறம் கூட்டி வைப்பீரே
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே
தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவீர் நீரே (3)

36
37

[illegible] காதல்

I-129 ([illegible])

[illegible] - அவள்
பெண்மையைக் கண்டு [illegible]
[illegible] - மதி
[illegible]
வெள்ளை மலர் போல் - அவள்
விண்ணையும் [illegible] ~~[illegible]~~ [illegible]
[illegible] - ~~அவள்~~ [illegible]
~~[illegible]~~ வெள்ளை [illegible] ! — 1.

[illegible] - அவள்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ! (2)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] - அவள்
[illegible] ! — 3.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ? [illegible]
[illegible]
[illegible] ! (4)

[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ; [illegible]
[illegible]
[illegible] ! (5)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] — [illegible]
[illegible] ! —— (6)

[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible] ! —— (7)

[illegible]

[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible], [illegible]
[illegible] — [illegible]
[illegible] ! —— (8)
[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible]
[illegible] — [illegible]
[illegible] ! —— (9)

The wind it bloweth strong, by Will Divine
The sea sends forth his song, by Will Divine.

——— oo ——— oo ——— oo ———

I-158

பொய்யோ? மெய்யோ?

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே நீங்களெல்லாம்
சொப்பனந் தானோ? — பல
தோற்ற மயக்கங்களோ? —
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? — உம்முள்
ஆழ்ந்த பொருளில்லையோ? — (1)

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்,
கானலின் நீரோ? — வெறும்
காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப் போற் புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ? — இந்த
ஞாலமும் பொய்தானோ? (2)

காலமென்றே ஒருநினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ? — அங்கு
குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்
சோலை பொய்யாமோ? — இதைச்
சொல்லொடு சேர்ப்பாரோ? (3)

காண்பதெல்லாம் மறையுமென்றால், மறைந்ததெல்லாம் காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே — நித்தம்
விதி தொடர்ந்திடுமோ?.
காண்பதுவே உறுதிகண்டோம், காண்பதல்லால் உறுதியில்லை —
காண்பது சக்தியாம் — இந்தக்
காட்சி நித்தியமாம் — (4)

II

(Copied)

உப்பளம் கோயிலில்
எழுந்தருளியிருக்கும்
தேசமுத்துமாரி.

தேடியுனைச் சரணடைந்தேன்
தேச முத்து மாரி —
கேடதனை நீக்கிடுவாய்
கேட்டவரந் தருவாய் — 1.

பாடியுனைச் சரணடைந்தேன்
பாசமெல்லாங் களைவாய் —
கோடிநலஞ் செய்திடுவாய்
குறைகளெல்லாந் தீர்ப்பாய் — 2.

எப்பொழுதுங் கவலையிலே
இணங்கி நிற்பான் பாவி —
ஒப்பியுனை ஏத்தல் செய்வேன்
உனதருளால் வாழ்வேன். (3)

சக்தியென்று நேரமெல்லாந்
தமிழ்க் கவிதை பாடி —
பக்தியுடன் போற்றி நின்றால்
பயமனைத்துந் தீரும் — (4)

ஆதாரம் சக்தியென்றே
அருமறைகள் கூறும்
யாதானுந் தொழில் புரிவோம்
யாதுமவள் தொழிலாம் — 5

துன்பமே யியற்கையெனுஞ்
சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம்
யாவுமவள் தருவாள் — 6

நல்லார் ஒழுக்கு
நான்மறைத் தீர்ப்பு.
அல்லவையைச் சான்றோர்கள்
அறிவாரும் பொருளாம். (9)

43

44

பிழைத்த தென்னந் தோப்பு.

(பா. லேபிள்)

வயலிடையினிலே — செழுநீர்
மடுக்கரையினிலே
அயலெவரு மில்லை — தனியே
ஆறுதல் ~~[illegible]~~ கொள்ள வந்தேன் — (1)

~~காற்றடித்ததிலே — மரங்கள்~~
~~கணக்கிடத் தகுமோ —~~
~~நாற்றுப் போலனமே — சிதறி~~
~~[illegible] — (2)~~

காற்றடித்ததிலே — மரங்கள்
கணக்கிடத் தகுமோ?
நாற்றினைப் போலே — சிதறி
நாடெங்கும் வீழ்ந்தனவே! (2)

சிறிய திட்டையிலே — உளதோர்
தென்னஞ் சிறு தோப்பு.
வறியவ னுடைமை — அதனை stet (3)
வாயு பொடிக்கவில்லை.

வீழ்ந்தன சிலவாம் — மரங்கள் stet
மீந்தன பலவாம்.
வாழ்ந்திருக்க வென்றே — அதனை
வாயு பொறுத்து விட்டான் (4)

தனிமை கண்டதுண்டு — அதிலே
சாரமிருக்குதம்மா!
பனி தொலைக்கும் வெயில் — அதுவும்
பாடு படுமன்றோ? (5)

இதை நின்று காண் — வண்ணமே
இன்ப வெள்ளத் திரளாய்

பால வெண்ணிலவே — கதிர்கள்
பாயக் காய்ந்தனவே — (6)
நின்று மகிழ்ந்திடவே — இங்கோர்
நிழலினை வாழ்த்தேன்
என்றும் கவலையிலே — நினையாம்
இன்ப மூழ்கிக் கொண்டேன் — (7)

வாழ்க பராசக்தி! — நினைவே
வாழ்த்திடுவோம் வாழ் ~~[illegible]~~ வாழ்ந்தோம்.
வாழ்க பராசக்தி — இந்தவெண்
வாசகம் ஓவாதே — (8)

வேண்டும்.

உ

மனதி லுறுதி வேண்டும்.
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும் — 1.

கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்,
பெண் விடுதலை வேண்டும்
~~[illegible]~~! பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானக மிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்.
ஓம், ஓம், ஓம், ஓம் 2.

புயற் காற்று

தேதி—கார்த்திகை ... 8?: புதன் கிழமை மாலை.

ஒரு கணவனும் மனைவியும்.

மனைவி சொல்லுகிறாள்:— "காற்றடிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே,
தூற்றல் கதவு சாளர மெல்லாம்
தொளைத் தடிக்குது பள்ளியிலே."

கணவன் சொல்:— வானஞ் சினந்தது; வையம் நடுங்குது
வாழி பராசக்தி காத்திடவே;
தீனக் குழந்தைகள் துன்பப் படாதிங்கு
தேவி அருள் செய்ய வேண்டுகிறோம்.

மனைவி சொல்:— நேற்றிருந்தோ மந்த வீட்டினிலே யிந்த
நேர மிருந்தா லென்படுவோம்?
காற்றென வந்தது கூற்ற மிங்கே நம்மை
காத்தது தெய்வ வலிமையன்றோ?

பக்தி

(பல்லவி.)

தித்தனா தானனா — தத்தத்
தான தனத்தன தான தனத்தன.

பக்தியினாலே — தெய்வ
பக்தியினாலே.

1. பக்தியினாலே — இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ
சித்தந் தெளியும் — இங்கு
செய்கை யனைத்திலுஞ் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் — நல்ல
வீரர் உறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவ முண்டாம் — நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும். (பக்தியினாலே)

2. காமப் பிசாசைக் — குதிக்
கால்கொண் டடித்து விழுத்திட லாகுமித்
தாமசப் பேயைக் — கண்டு
தாக்கி மடித்திட லாகுமெந் நேரமும்
தீமையை யெண்ணி — அஞ்சும்
தேம்பல் பிசாசைத் திருகி யெறிந்து பொய்
நாம மில்லாதே — உண்மை
நாமத்தி னாலிங்கு நன்மை விளைந்திடும். (பக்தியினாலே)

3. ஆசையைக் கொல்வோம் — புலை
அச்சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம் கெட்ட
பாச மறுப்போம் — இங்கு
பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை
மோசஞ் செய்யாமல் — உண்மை

[illegible]
[illegible] —
[illegible] — ([illegible])

4- [illegible] —
[illegible]
[illegible] —
[illegible]
[illegible] —
[illegible]
[illegible] —
[illegible] ([illegible])

5 [illegible] —
[illegible]
[illegible] —
[illegible]
[illegible] —
[illegible]
[illegible] —
[illegible] !
([illegible])

6- [illegible] —
[illegible]
[illegible] —
[illegible]
[illegible] —
[illegible]

49

50

[illegible] [illegible] — [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] ([illegible])

(௭) [illegible] [illegible] — [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] -
[illegible] [illegible] — ~~[illegible]~~ இங்கோ
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible].
[illegible] [illegible] — [illegible]!
[illegible], [illegible], [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] — [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ([illegible])

50

51

I-114

முருகன் பாட்டு.

வீரத் திருவிழிப் பார்வையும் - வெற்றி
வேலு மயிலுமென் னெண்ணிலே - எந்த
நேரத் திலுமென்னைக் காக்குமே - அன்னை
நீல பராசக்தி தண்ணருட் - கரை
யோரத் திலே புணை கூடுதே - கந்தன்
ஊக்கத்தை யென்னுளம் நாடுதே - மயில்
வாரத் திலே விளை யாடுவான் - என்றும்
வானவர்த் துன்பத்தைச் சாடுவான் - (1)

வேடர் கனியை விரும்பியே - தவ
வேடம் புனைந்து திரிகுவான் - தமிழ்
நாடு பெரும்புகழ் சேரவே - முனி
நாதனுக் கிம்மொழி கூறுவான் - சூரர்
பாடு விடுத்து மகிழ்ந்திட - இருட்
பார மகலத் தீருவான் - மறை
யேடு தரித்த முதல்வனும் - குரு
வென்று மெய்ப்புகழ் நேருவான் - (2)

தேவர் மகளை மணந்திடத் - தெற்குத்
தீவி லசுரனை மாய்த்திட்டான் - மக்கள்
யாவருக் குந்தலை யாயினான் - மறை
யாத்த முனிவர்த் திவ் வாயினான் - என்றும்
பாவலர்க் கின்னருள் செய்குவான் - சிறப்
பாகி வருமழை பெய்குவான் - நெஞ்சில்
ஆவ லறிந்தருள் கூட்டுவான் - நித்தம்
ஆண்மையும் வீரம் ஊட்டுவான் - (3)

[illegible]

தீமைத் தொடு படு வேதியர் — கண்ணன்
தேவசத் திருப்பதிப் பட்டணம் — தேசு
மேடை முழு செம் பொன் நாட்டணம் — கண்ணன்
~~தேவசத் திருப்பதிப் பட்டணம்~~
வேண்ணமயி நலாகு நாட்டணம் — ஜய
தீவாவெல் ஒரு வெற்றிமே — வந்து
கிண்டு திருப்பதிப் பாடுவோம் — வா
மேவள் பராசக்தி மணித் தினம் — உங்கள்
இன்றெழுமே மெண்ணு பாடுவோம்.

கிருஷ்ணா

வெற்றித் திருவாழிப் பார்ணவயும் — வெற்றி
வேலு மயிலு மன் மன்னின்றே

நெஞ்சொடு சொல்வது. I-135

இன்னு மொரு முறை சொல்வேன் பேதை நெஞ்சே
எதற்கு மினி யுளையாதே, ஏக்கம் தீர்வாய், (உளைவதிலே பயனொன்றில்லை
என்று அச்சு பிரசுரமாயிருக்கு)
முன்னர் நம திச்சையினால் பிறந்தோமில்லை
முதலிறுதி யிடை நமது வசத்தி லில்லை,
மன்னு மொரு தெய்வத்தின் சக்தி யாலே
வையகத்துப் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்
பின்னை யொரு கவலையுமிங் கில்லை நாளும்
பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய். (1)

நினையாத வினையெல்லாம் விளைந்து கூடு
நினைத்தபயன் காண்பதெலாம் மெய்மை யன்றோ?
மனமார உண்மையினைப் புரப்பா யேனோ?
மனமார்ந்த பொய்ந்நெறி மறுக்கா யேனோ?
எனையாளும் மாதேவி வீரர் தேவி
இமையவருந் தொழுந்தேவி யெல்லாந் தேவி
தனைவாழ்த்து பொருளெல்லாம் தருக்குந் தேவி
சரணடையே துணிவென்று பற்றுவாய் நெஞ்சே. (2)

சக்தி யென்று புகழ்ந்திடுவோம், முருகனென்போம்
சங்கரனென் றுரைத்திடுவோம், கண்ணனென்போம்
நித்தியமாம் தலைவனையே நிலையென் றெண்ணி
நினைக்குமெல்லாம் நிறைவேறத் தீர்க்கச் சொல்லி,
பக்தியினால் பெருமையெலாம் கொடுக்கச் சொல்வாய்
பசிபிணிக ளில்லாமை யாக்கச் சொல்லி
உத்தமனை நெறியிலே நிற்கச் சொல்லி
உலகாத்த நாயகத்தை இறைஞ்சுவாய் நெஞ்சே;

சொல்லடங்கள் [illegible] விடுக்க வேண்டும்,
சிறுமைக்கொள் [illegible] விடுக்க வேண்டும்,
கல்லாமை [illegible] தொலைக்க வேண்டும்,
கடினமான [illegible] கெடுக்க வேண்டும்.
[illegible] மடப்பேயைத் தொலைக்க வேண்டும்,
துன்பமென்று [illegible] தொடாச் செய்தே
நல்லவழி சேர்ப்பதற்குக் [illegible] வேண்டும்,
நமோ நம, ஓம் சக்தியென நவிலாய் நெஞ்சே — (4)

பாட்டினிலே சொல்லுவது அவள் சொல்லாகும்,
பயனின்றி உரைப்பாளோ? பாராய் நெஞ்சே
கேட்டது நீ பெற்றிடுவாய், ஐய மில்லை,
கேடில்லை, தெய்வமுண்டு வெற்றி யுண்டு
மீட்டுமுனைக் காத்திடுவேன், ஆதி சக்தி
வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தி
நாட்டினிலே சனகனைப் போல் நமையுஞ் செய்தாள்
நமோ நம ஓம் சக்தியென நவிலாய் நெஞ்சே — (5)